செ.வெ.எண்: 707

நாள்: 01/12/2011

## செய்தி

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில் நடைபெற்ற மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து செயல்பாட்டிலும் கூட்டுறவுத்துறை முதலிடம் வகிக்கும் வகையில் செயல்பட துறை அலுவலர்களுக்கு அறிவுரை**

*******

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க இன்று (1.12.2011) மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர் கே.ராஜூ அவர்கள் தலைமையில், சென்னை, தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகையில் உள்ள கூட்ட அரங்கில், கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள் மற்றும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அப்போது பொதுவிநியோகத் திட்ட செயல்பாட்டின் மேம்பாட்டிற்காக தொடர வேண்டிய மேல் நடவடிக்கைகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பயிர்க்கடன் ரூ.3000 கோடிக்கு மேல் வழங்குதல், அதில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு ரூ.600 கோடி அளவிற்கு பயிர்க்கடன் வழங்குதல், ரூ.25000/– கோடி அளவிற்கு நகைக்கடன் வழங்குதல், சுயஉதவிக் குழுக்களுக்கு கடன், வைப்புத் தொகை திரட்டுதல், மாற்றுத் திறனாளிகளுக்கு ரூ.15 கோடி அளவிற்கு கடன், 1100 பொதுச் சேவை மையங்கள் தொடங்குதல், வேளாண் மருத்துவ பயன்பாட்டு மையங்கள் மற்றும் வேளாண் சேவை மையங்களின் செயல்பாடுகள், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து கடன் பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்த வேண்டிய கடன் நிலுவை வசூல், வங்கிகளின் வியாபார வளர்ச்சி, விதைகள் மற்றும் உரம் விற்பனை, 100 வட்டத் தலைமையிடத்தில் கூட்டுறவு மருந்தகங்கள் அமைத்தல், அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நுண்காப்பீட்டு திட்டம் தொடங்குதல், கூட்டுறவுச் சங்கங்களில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், ஒருங்கிணைந்த கூட்டுறவு அலுவலக வளாகம் கட்டுமானப் பணி, கூட்டுறவு வங்கிகளை கணினிமயமாக்குதல், 4534 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பணப்பரிமாற்றம், மின்னணு வங்கியியல் (E-Banking) திட்டத்தைச் செயல்படுத்துதல், கூட்டுறவு அச்சகங்களின் வியாபார முன்னேற்றம், கருணை அடிப்படையிலான பணி நியமனம் மற்றும் கூட்டுறவுத்துறையின் மானியக் கோரிக்கையின் போது சட்டப் பேரவையில் அறிவித்த அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்தும், வருங்காலங்களில் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் குறித்தும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைப்பதற்கும், அதன் வாயிலாக அவர்களின் தனிநபர் வருமானம் உயருவதற்கும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்துள்ளார்கள் எனவும், விவசாயப் பெருமக்கள் தங்களது விளைப்பொருட்களை இயற்கை சீற்றங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள ஏதுவாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க ரூ.107.26 கோடி செலவில் 1166 சேமிப்பு கிடங்குகள் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

கூட்டுறவுச் சங்கங்களை எளிதில் அணுகி கடன் பெற இயலாத சிறு, குறு விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் பயிர்க்கடன் வழங்குவதற்கு தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்வதோடு, விவசாயிகளுக்குத் தேவையான சான்றளிக்கப்பட்ட விதைகள் கிடைத்திடவும், ரூ.850 கோடி அளவிற்கு உரங்களை விற்பனை செய்திடவும், தடையின்றி உரங்கள் கிடைத்திடவும், வேளாண் மருத்துவ பயன்பாட்டு மையங்கள் மூலம் மண் பரிசோதனை, நீர் பரிசோதனை மேற்கொள்ளவும், பொது சேவை மையங்களின் மூலம் கிராமப்புற மக்களுக்கும் கணினி சேவை வழங்கிடவும், கூட்டுறவு மருந்தகங்கள் மூலம் தரமான மருந்துகள் நியாமான விலையில் ஏழை, எளிய மக்களுக்கு கிடைத்திடவும் வேளாண் சேவை மையங்கள் மூலம் குறைந்த வாடகையில் வேளாண் கருவிகள் அளித்தல் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை நிறைவு செய்யும் வகையில் அவர்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் அனைத்தையும் சீரிய முறையில் செயல்படுத்தி அனைவரும் பயன்பெற முழு ஈடுபாட்டுடன் செயல்படுவதோடு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி கூட்டுறவுத்துறை அனைத்து செயல்பாட்டிலும் முதலிடம் வகிக்கத் தக்க வகையில் திட்டங்கள் வகுத்து செயலாற்றிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களிடம் வலியுறுத்தினார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை செயலாளர் திருமதி எம்.பி.நிர்மலா, இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு.ப.அண்ணாமலை, இ.ஆ.ப., கூடுதல் பதிவாளர்கள் திரு.ந.அசோகன், திரு.அ.சங்கரலிங்கம், திரு.இரா.ராஜேந்திரன், திரு.க.பு.பெ.பன்னீர்செல்வன், திரு.இரா.ஜெயராம், திரு.இரா.கார்த்திகேயன், திரு.என்.சிவனருள், திரு.எம். தர்மலிங்கம், திரு.கே.பாலசுப்ரமணியன் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர்கள், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் தனி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9